# கேளுங்கள்

## பாகம் 19

### 4. ஏற்ற காலத்தில் விதைக்க வேண்டும், பொறுத்திருக்க வேண்டும் *( கலா 6:9 )*

நமது பல ஜெபங்களுக்கான பதில்களும், விதைப்பது – அறுவடை செய்வது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இருக்கலாம். அறுவடையின் ஒரு முக்கியமான விஷயம் 'காலம்'. நமக்கு அரிசி வேண்டுமென்றால், குறைந்தது ஒரு மூன்று மாதங்களுக்கு முன்பாகவாவது நெல்லை விதைத்திருக்க வேண்டும். அது போலத்தான், நமக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏதாவது தேவையானால், அதற்கு முன்பே விதைத்திருக்க வேண்டும். அப்போதுதான் ஏற்ற காலத்தில் அறுவடை செய்ய முடியும்.

### 5. மன்னிக்க வேண்டும்.

***மாற்கு** 11: 25 – 26. நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்.*

*26. நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.*

நம்முடைய இருதயத்தில் மன்னியாய்மை இருக்குமானால் அது நமது ஜெபங்களுக்கான பதில்களை தடுக்க முடியும். நாம் ஜெபிக்க தீர்மானிக்கும்போதே மன்னிக்கவும் தீர்மானிக்க வேண்டும்.

### 6. தேவனை தொடர்ந்து துதித்துக்கொண்டிருக்க வேண்டும்.

***சங்** 8:2* பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டுபண்ணினீர்.

***( மத் 21:16).***

**Bro D.Vergin kumar,**

-----------------------------

**ஆமென்.**

அன்பு சகோதரா ! சகோதரி ! **கேளுங்கள்**. அது உங்கள் உரிமை. **பெற்றுக்கொள்ளுங்கள்**. **கொடுங்கள்.** **ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**

If you need any clarifications kindly contact me in deeveekumar@yahoo.com Ph; 25572195, 99663557. 99638328. Your comments are welcome.

**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Vine's expository Dictionary of New Testament words, Strong's bible concordance, Don krow's Discipleship evangelism lessons, Wuest's bible commentary, Wuest's New Testament word studies, Vincent's Word Studies in the New Testament , Interlinear bible…etc.. All bible quotes are from King James Version and Amplified bible. In Tamil Bible some verses may by above or below than the quoted reference.

----------------